# தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகளாரின் 150ஆவது பிறந்த நாள் நிறைவுப் பெருவிழா!

## நேற்றைய தொடர்ச்சி

இப்போராட்டத்தின் ஒரு பகுதியாகத் திருச்சியிலிருந்து சென்னை நோக்கிக் கிளம்பிய 'தமிழர்படை' நடைப்பயணம் மேற்கொண்டது. இப்படைக்குப் பட்டுக்கோட்டை அழகர்சாமி தலைமை தாங்கி நடத்தி வந்தார். அப்படையில் சுமார் நூறு பேர் இராணுவ உடை தாங்கி வந்தனர். இத்தமிழர் படையில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், டாக்டர் எஸ்.தருமாம்பாள் ஆகியோரும் பங்கு கொண்டனர். கரந்தை உமாமகேஸ்வரம் பிள்ளை தலைமை தாங்கினார். 'நகரதூதன்' ஆசிரியர் ரெ.திருமலைசாமி படையின் செயலாளராகப் பணியாற்றினார்.

இத்தமிழர் படையினர் சென்னையை அடைந்து மூலக்கொத்தளத்தில் உள்ள அரிசி ஆலையொன்றில் தங்கியிருந்தனர். அவ்வீரர்களுக்கு மறைமலையடிகள் வந்து உணவு பரிமாறினார்.

**நான், இந்த இந்தி எதிர்ப்புத் தமிழர் படைக்கு உணவு பரிமாறக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் எனக் கூறிப் படையினரை மகிழ்ச்சி கொள்ளச் செய்தார்.** இந்தி மொழி குறித்து ஆய்வு செய்தும், இந்தி எதிர்ப்பு வீரர்களை மகிழ்ச்சி கொள்ளச் செய்தும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்திய மறைமலையடிகள், தம் மகன் வித்துவான் மறை. திருநாவுக்கரசு அவர்களைச் சிறைக்கோட்டத்திற்கு அனுப்பியும் வைத்தார். இவ்விந்தி எதிர்ப்புப் போரினால் மற்றொரு முக்கியமான வரலாற்று விளைவும் உண்டாயிற்று.

தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமான இன உணர்வு என்பது, தமிழ் வேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் காலத்திலும் இல்லை; அது உருவாக்கப்படவும் இல்லை. சிலப்பதிகாரம் போன்ற அய்ம்பெரும் காப்பியங்கள் இயற்றப்பட்டபோதும், **'யாதும் ஊரே யாவரும் கேளிர்'** எனச் **சங்ககாலப் புலவர் கணியன் பூங்குன்றனார்** பாடியபோதும் **"வேறுள குழுவை யெல்லாம் மானுடம் வென்றதம்மா"** எனக் **கம்பன்** இராம காதையை யாத்த போதும், மொழிவழிநாடு என 'ஓரினமாக' உணர்ச்சிபெற்றுத் தமிழகம் இருந்ததே இல்லை. அப்படிக் காப்பியங்கள் ஓரின உணர்வைத் தோற்றுவித்திருந்தாலும், மரபுவழி தமிழ் அரசுகள் தமிழ் இன ஒற்றுமையை வளர்த்தெடுத்திருக்கமாட்டா.

ஆனால், இருபதாம் நூற்றாண்டின் தமிழகம் அவ்வாறாக இல்லை வளர்ந்து கொண்டிருந்த சனநாயக உணர்வுகள் இன உணர்வைக் காட்டிக் கொள்ள வழிவிட்டன. தமிழ் இன எதிரிகளும், இன உணர்வு ஓங்குவதற்கான வழிகளை அவர்கள் அறியாமலேயே செய்தனர். இச்சமயத்தில்தான் மறைமலையடிகள் போராட்டத்திலும் இன உணர்விலும் பங்கு கொண்டு மேலும் செழுமையை உண்டாக்கினார். 04.10.1937இல் சென்னை கோகலே அரங்கத்தில் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்திற்கு தலைமையேற்றுத் தனித் தமிழில் பேசினார். 'தமிழ் வாழ்க! இந்தி ஒழிக' என்று முழக்கமிட்டுக் கொண்டு ஏராளமான மக்கள் கடற்கரைக் கூட்டத்திற்குச் செல்வதறிந்து தமது மகிழ்ச்சியை நாள் குறிப்பில் குறித்தார்.

திருவல்லிக்கேணிக் கடற்கரையில், அவரது தலைமையில் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில், **'தமிழ்நாடு தமிழருக்கே'** எனும் தீர்மானத்தை முன்மொழிந்தார். நாவலர் சோமசுந்தரபாரதி அத்தீர்மானத்தை வழிமொழிந்தார். பின்னாளில், இதன் வடிவம் **'திராவிட நாடு திராவிடருக்கே'** என மாற்றம் அடைந்தது. ஆட்சியாளர்கள் இந்தியைத் திணித்ததன் விளைவு ஒரு நாட்டின் கோரிக்கை உருவாகக் காரணமாயிருந்தது.

1938-இல் மூட்டிய அவ்விந்தி எதிர்ப்புப் போராட்டக் கனல் 1948, 1952,1965,1986 எனத் தொடர்ந்து கனன்று கொண்டிருக்கும் அவ்வுணர்வு இன்றும் அப்படியே தேக்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வுணர்வுகளுக்கு வித்திட்டவர்களில் ஒருவர்தான் மறைமலையடிகள்.

அறிஞர் அண்ணா அவர்கள் மலேசியச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட நேரத்தில் அவரிடம் அங்குள்ள மக்கள் அறிவார்ந்த நூல் ஒன்றினை அளித்து அவரது கருத்தினைக் கேட்டனர். அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் **"இந்தக் கருத்துகள் 'புதியன அல்ல' இக் கருத்து எங்கள் தமிழ்நாட்டில் எப்போதோ மறைமலையடிகள் போன்றவர்கள் கூறியிருக்கிறார்கள்"** என்று குறிப்பிட்டார்.

அடிகளாரைப் பின்பற்றி மொழியியல் துறையில் மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணரின் மொழியியல் ஆய்வுகளைத் தி.மு.கழகம் வரவேற்றது மட்டுமின்றி, அவரது **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியைத் தொகுப்பதற்குக் கழக அரசு 1974-இல் பாவாணரின் தலைமையில் ஓர் இயக்ககத்தையே நிறுவியது. தமிழின் மீதும், அடிகளார் மீதும், பாவாணரின் ஆய்வின் மீதும் தி.மு.கழகம் கொண்டுள்ள ஆழமான 'பிடிப்பே' இதற்குக் காரணமாகும்.** பாவாணர் பற்றிய கட்டுரை 'திராவிட இயக்கத் தூண்கள்' எனும் எமது நூலில் இடம்பெற்றுள்ளது அங்கே படித்துணர்க!

**"பெரியார் திரு.ஈ.வெ.ரா., யான் விளக்கிய கொள்கைகளையே மேலுந்திடமாய் எடுத்து விளக்கிப் பேசவும், எழுதவுந் தொடங்கிய காலந்தொட்டு, ஆரியச் சேர்க்கையால் தமிழ்மொழிக்கும் தமிழர் கோட்பாட்டிற்கு தமிழரது வாழ்க்கைக்கும் நேர்ந்த குறைபாட்டைத் தமிழர் உணர்வராயினர். அவரிற் கற்றவரும் என்மேற்கொண்ட சீற்றம் தவிர்ப்பாராயினர்"** என 1948-இல் மறைமலையடிகள் எழுதினார். திராவிடர் இயக்கத்தோடு அவருக்குள்ள நெருக்கத்தை இதன் மூலம் அறியலாம்.

திராவிட இயக்கம் மறைமலையடிகளாரைப் பெரிதும் மதித்தது போற்றியது. முரண்களைச் சமரசம் செய்து கொண்டு தமிழின மேம்பாட்டிற்கு அவரோடு இணைந்து பணியாற்றியது திராவிட இயக்கம். கலைஞர் ஒருமுறை கவியரங்கு ஒன்றில் **'பழந்தமிழ் வித்தகர் பல்லாவரத்தார்'** என்று சிறப்பித்துக் கூறினார். மறைமலையடிகளை காங்கிரஸ் போற்றியதுமில்லை, பாராட்டியதுமில்லை.

சுவாமி வேதாசலம் எனும் அவரது இயற்பெயரை தனித் தமிழில் **'மறைமலைஅடிகள்'** என மாற்றம் செய்து கொண்ட போது காங்கிரசார் அத்தனித் தமிழ்ப் பெயரை 'மரஞ்செடிக்கொடிகள்' என்று கேலி செய்தனர். 1990-களில் தமிழ்நாடு காங்கிரசார் மறைமலை நகர் தொடர் வண்டி நிலையத்திற்கு காமராசர் நகர் என்று பெயர் சூட்டுமாறு கிளர்ச்சி செய்தனர். காமராசர் இருந்திருந்தால் இதை விரும்பி இருக்க மாட்டார். இப்படிப்பட்ட தேவையற்ற கிளர்ச்சிகளை மேற்கொண்ட பெருமதியினர் அவர்கள்.

எதனை எதிர்ப்பது என்கிற அடிப்படை அறிவே அற்ற காங்கிரசார், மறைமலையடிகளின் பெயரை நீக்க ஒரு போராட்டத்தினை மேற்கொண்டனர். காங்கிரசார் தமது பெயருக்கு மேலும் ஓர் இழுக்கைத் தேடிக்கொண்டனர். அவர்கள் அவ்வாறு போராட்டம் நடத்த முற்பட்டபோது, மலைமலை அடிகளாரைக் குறித்துக் கலைஞர் முரசொலியில் ஒரு மடல் எழுதி அடிகளாரின் பணி பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.




**க.திருநாவுக்கரசு**


**திராவிட இயக்க ஆய்வாளர்**


மறைமலையடிகளாருக்கும் காங்கிரசாருக்கும் எவ்வித உறவும் எப்போதும் இருந்ததில்லை. 1905-ஆம் ஆண்டில் யாரோ கேட்டுக் கொண்டதற்கிணங்க விடுதலை இயக்கத்தைப் பற்றிச் சில பாடல்களைப் புனைந்து தந்திருக்கிறார். அவ்வப்போது இந்திய விடுதலை தொடர்பான சில முக்கிய நிகழ்ச்சிகள் சிலவற்றைத் தமது நாள் குறிப்பில் குறித்திருக்கிறார். இன்னும் சொல்வதானால் **'திரு.காந்தியின் பல கருத்துகள் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதவை'** என அவர் தமது குறிப்பில் எழுதினார். அவர் தமிழும், சைவமும் தழைக்க உழைத்தவர். தனித்தமிழ் இயக்கங்கண்ட தந்தை.

மறைமலை அடிகளின் தனிச்சிறப்பு அவர் 3.01.1898 முதல் 14.08.1950 வரை நாள் குறிப்பு எழுதியிருக்கிறார். இந்த நாள் குறிப்பு ஆங்கிலத்தில் எழுதப்பட்டு இருக்கிறது. இதில் முக்கியச் செய்திகள் எழுதப்பட்டு இருக்கின்றன. அவருடைய 150ஆவது பிறந்த நாள் விழாவின் போது அக் குறிப்புகளிலிருந்து சிலவற்றை நம் நடையிலேயே எடுத்துக் காட்ட விரும்புகின்றோம்.

இந்நாள் குறிப்பில் பரிதிமாற்கலைஞரிலிருந்து பொதுவுடைமைத் தலைவர் ப.ஜீவானந்தம் வரை அவரை வந்து சந்தித்த நிகழ்ச்சிகள் அல்லது அவர் போய் சந்தித்த நிகழ்ச்சிகள் இடம் பெற்று இருக்கின்றன. இவர் போய் சந்தித்த நிகழ்ச்சிகள் மிகக் குறைவாகவே இடம் பெற்று இருக்கின்றன.

23.04.1899இல் திரு.ஜே.எம்.நல்லாசாமிப் பிள்ளை அவர்களுடன் நீண்டநேரம் உரையாடியக் குறிப்புகள் காணப்படுகின்றன. ஜி.யு.போப், மாக்ஸ் முல்லர் போன்றவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். திராவிட பாஷா சங்கக் கூட்டம் ஒன்றுக்குத் தலைமையேற்று உரையாற்றி இருக்கிறார்.



(1876-2026)

மாக்ஸ் முல்லரின் நூல்களில் இராமகிருஷ்ணரின் வாழ்க்கை வரலாற்று நூலினையும் India; What it can teach us; 'Three Lectures on the science of Language', 'Comparative Philology' எனும் நூல்களையும் மறைமலையடிகள் படித்து இருக்கிற குறிப்புகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

விக்டோரியா மகாராணியார் இறந்த செய்தியை 21.01.1901ஆம் தேதி நாள்குறிப்பின்படி நாளேடுகளைப் பார்த்து மறைமலை அடிகள் அறிந்து கொண்ட செய்திப் பதிவாகி இருக்கிறது. மாக்ஸ் முல்லரின் Six system of Hindu Philosophy எனும் நூலை அவர் விலை கொடுத்து வாங்கி இருக்கிறார். ஏராளமான மேற்கத்திய அறிஞர்களின் நூல்களை வாங்கிப் படித்து அதன் பதிவுகளை அவர் தந்து இருக்கிறார்.

அடிகள் சென்னை நகரில் குடியேறிய போது ஐந்து இடங்களில் வாடகைக்கு குடியிருந்து இருக்கிறார். அதற்கான முகவரிகள் நாள் குறிப்பில் இடம் பெற்று இருக்கின்றன. 1911 முதல் தான் அவர் பல்லாவரத்தில் சொந்த மாளிகை கட்டிக் குடிபுகுந்தார். அதற்கான வீட்டு மனையை ரூ.90 கொடுத்து வாங்கி இருக்கிறார்.

02.11.1903 ஆம் தேதி சூரிய நாராயண சாஸ்திரியார் எனும் பரிதிமாற் கலைஞர் மறைந்தார் எனும் செய்தியை மிகுந்த ஆழ்ந்த வருத்தத்துடன் அடிகளார் பதிவு செய்து இருக்கிறார். உபநிடதங்களை அடிகளார் படித்து வருகிற செய்திகளை நாள் குறிப்புகளிலிருந்து தெரிந்து கொள்கிறோம். இதனை அடிகளார் மிக ஆழமாகத் தமது 'வேளாளர் நாகரிகம்' எனும் நூலில் எடுத்துரைப்பதை நாம் படிக்கலாம்.

மதுரை தமிழ்ச்சங்க ஆண்டு விழாக் கூட்டத்திற்கு அடிகளார் சென்று இருக்கிறார். அந்தக் கூட்டத்திற்கு உ.வே.சாமிநாதையர் தலைமை. இரண்டு மணி நேரம் பேசிய அவர், ஏதேதோ பேசினார் என்று அடிகளார் தமது நாள் குறிப்பில் குறிப்பிட்டு இருக்கிறார். மாலை 4.30 மணிக்குத் தொடங்கிய இந்தக் கூட்டம் இரவு 10.00 மணிக்குத்தான் முடிந்தது. இந்தக் கூட்டத்தில் ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொண்டே இருந்தது அடிகளாருக்குப் பிடிக்கவில்லை.

இன்னொரு முக்கியமான செய்தியை அடிகளார் தமது நாள்குறிப்பில் குறித்து இருக்கிறார். நூல்கள் வாங்குவதற்கு ஏராளமான பணம் அவர் செலவழிப்பது அடிகளாரின் மனைவியாருக்கு மகிழ்ச்சியளிக்கவில்லை. இதை அவர் எப்படி குறிப்பிடுகிறார் என்றால், 'என் மனைவி முகம் கொடுத்து பேசவில்லை' என்று எழுதியிருக்கிறார்.

01.05.1907-இல் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் விபின் சந்திர பாலர் கூட்டம் நடைபெறுகிறது. 5000 பேர் திரண்டு இருக்கின்றனர். அலைகளின் இரைச்சலோடு அவரது வெண்கலக் குரலை அடிகளார் செவிமடுத்த நிகழ்வை பதிவு செய்து இருக்கிறார்.

அடிகளார் நாள் குறிப்பில் அதிர்ச்சியான ஓர் இடத்தை நாம் படித்தோம். பெரும்கடவுள் நம்பிக்கையாளர் இப்படி எழுதியிருக்கிறாரே என்பதுதான் நம் அதிர்ச்சிக்குக் காரணம். இதேபோல வள்ளலார் தமது இறுதி ஆய்விலும் வெளிப்படுத்தியுள்ளதை அறிஞர் உலகம் அறியும். அடிகளார் தமது 10.08.1909 ஆம் நாளைய குறிப்பில் பின் வருமாறு எழுதியிருப்பதை நாம் அப்படியே தருகின்றோம்.

**"ஈசனும் உமையுமே கடவுள் என்ற கருத்தில் நம்பிக்கை இழந்துவிட்டேன். கடவுளிடம் வேண்டுவதன் மூலம் மாற்றப்படாத நிலை பேறுடைய விதி, பேரண்டத்தில் உள்ளது. மேன்மை பெற்ற ஆன்மாக்களான கடவுளால் மனிதருக்கு ஏதேனும் செய்ய முடியவில்லை என்று எனக்குத் தோன்றவில்லை, அனைத்தும் நம் முயற்சிகளையே சார்ந்துள்ளன".** இதைத்தான் பகுத்தறிவாளர்களும் நாத்திகர்களும் சொல்கிறார்கள்.

1911 ஆகஸ்டில் துறவிகளுக்குரிய துவாராடை அணியலானார் அடிகள். டிசம்பர் 7 ஆம் தேதி மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பாண்டித் துரையவர்கள் மறைந்த செய்தியை மிகத் துயரத்துடன் அடிகள் பதிவு செய்து இருக்கிறார்.

1912 பிப்.1,2 ஆம் நாள்களில் வடலூர் சென்று இராமலிங்கரின் பணிகளைப் பார்த்து வியப்பும் மலைப்பும் கொள்கிறார். 2ஆவது நாள் அவரின் சன்மார்க்க சங்கத்தில் சொற்பொழிவாற்றுகிறார். அச்சொற் பொழிவில் வள்ளலாரின் சீர்திருத்த முறைகளை மாற்றுகிறவர்களை அடிகளார் கடுமையாகச் சாடுகிறார்.

1912 ஜீலையில் ஒரு நிகழ்வு நடக்கிறது. அடிகளாரை பிரிட்டிஷ் போலீசார் கண்காணிக்கிறார்கள். அதனை மடமை என்று பதிவு செய்து இருப்பதோடு, அவர் பிரிட்டிஷ் ஆட்சித் தொடருவதையே விரும்புவதாக நாள் குறிப்பில் எழுதியிருக்கிறார்.

1913 பிப்ரவரியில் சென்னை மாகான சபையில் திராவிட நாகரிகம் பற்றி இரண்டாவது சொற்பொழிவை ஆற்றியிருக்கிறார். சென்னை மகாசன சபை என்பது இப்போதைய அண்ணாசாலை எல்.ஐ.சி. கட்டிடத்தின் பக்கத்தில் இருந்த பழைய கட்டடம் ஆகும். இப்போது அந்த இடத்தில் சபையாரின் வேறு கட்டடம் இடம் பெற்று இருக்கிறது.

1913 மார்ச்சில் தனக்கு இலக்கணத்தில் ஏற்பட்டுள்ள அய்யங்களைப் போக்கிக் கொள்வதற்காக மணி.திருநாவுக்கரசு அடிகளாரைச் சந்தித்துப் பேசினார். 1914 இல் வேதாந்த சூத்திரங்களுக்கு நீலகண்டர், இராமாநுஜர், மாதவர், பாலதேவர் ஆகியோரின் உரைகளை ஒப்புநோக்கி எழுதி வருகிற செய்தியை அறிந்து கொள்கிறோம்.

முதலாம் உலகப்போர் நடந்து வருகிற, காலமாகையால் 23.09.1914 'எம்டன்' கப்பல் சென்னை நகரைத் தாக்கிய செய்தியை அடிகளார் எழுதியிருக்கிறார்.

1915 நவம்பரில் கீழ்க்காணும் விதத்தில் இரண்டு குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன.

(1)கந்தசாமிக் கவிராயரும் அவர் தம் வக்கீல் சோ. பாரதியாரும் சாட்சியங்களுடன் வந்தனர். மகாமகோபாத்யாய உ.வே.சாமிநாதய்யரும் மு.இராகவைய்யங்காரும் எனக்கெதிராகப் பல சொன்னார்கள்.

(2) என் வக்கீல் விசுவநாத சாஸ்த்திரி மு.இராகவைய்யங்காரைக் குறுக்கு வினாக்கள் கேட்டார். வக்கீலின் திறமையைக் கண்ட உ.வே.சாமிநாதய்யர் சமரசம் செய்ய முன்வந்தார். சமரசம் ஆயிற்று.

இது 'என்ன வழக்கு?'என்று தெரியவில்லை.

1938இல் இந்தி எதிர்ப்புக் கூட்டம் மறைமலை அடிகளார் தலைமையில் நடைபெறுகிறது. இக் கூட்டத்தில் அடிகளார் முன்மொழிய **தமிழ்நாடு தமிழருக்கே** எனும் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. இதனை நாவலர் பாரதியார் வழி மொழிந்தார். இக் கூட்டத்திற்கு இலட்சம் பேர் திரண்டிருந்தனர். ஒலிபெருக்கி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இவை அத்தனையும் அடிகளாரின் நாள் குறிப்பில் இடம் பெற்று இருக்கிறது.

04.08.1950 ஆம் நாளோடு முடியும் அடிகளாரின் நாள் குறிப்பில் செய்திகள் மேலே குறிப்பிட்டது போலக் குவிந்து கிடக்கின்றன. அடிகளார் 15.09.1950 இல் இயற்கை எய்தினார்.

**19 ஆம் நூற்றாண்டும் 20 ஆம் நூற்றாண்டும் திராவிடத் தமிழ்த் தேசிய புத்தெழுச்சிக்குக் காரணமான நூற்றாண்டுகள் ஆகும். புதுத்தமிழ் முன்னோடிகளும் மேலைநாட்டு ஆய்வாளர்களும் கிறிஸ்தவ பாதிரிமார்களும் அவர்களை அறியாமலேயே திராவிடத் தமிழ்த் தேசிய புத்தெழுச்சிக்கு நிரம்ப ஆதாரங்களை வழங்கிச் சென்று இருக்கின்றனர். அத்தேசிய எழுச்சிக்கு மொழி, சமய, பண்பாட்டு, நாகரிகத்தைத் தனித்த அடையாளமாக கொண்ட ஒரு இனத்தை அதன் பழைய மேன்மைகளை மீட்டுருவாக்கம் செய்து தந்து பணியாற்றியவர்களுள் முதல் வரிசையில் இருக்கிற அறிஞர்களில் அடிகளார் ஒருவர். அவரின் 150ஆவது பிறந்த நாளின் போது அவரை நினைவு கூர்ந்து போற்றி, பாராட்டி அவ்வெழுச்சிகளைத் திரும்பிப் பார்ப்போமாக!** ●

# ஆத்தூர் நகராட்சிப் பணிகள் தனியாருக்கு தாரைவார்ப்பு!

## கொத்தடிமைகளாக மாறும் துப்புரவுப் பணியாளர்கள்!

*சேலம், ஜூலை 16 -* ஆத்தூர் நகராட்சி துப்புரவு பணிகளுக்கு பத்திரத்தில் எழுதி வாங்கி கொண்டு பணியில் அமர்த்தபடுகிறது. அடிப்படை உரிமைகளை கேட்க கூடாது. போராட்டத்தில் ஈடுபட கூடாது என்று பத்திரத்தில் எழுதி வாங்கி பணியில் அமர்த்தும் அடிமை நிலை குறித்து விசாரணைநடத்திட கோரிக்கை.

சேலம் மாவட்டம் ஆத்தூர் நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு துறையூர் பகுதியைச் சேர்ந்த தனியார் ஒப்பந்த நிறுவனமான எஸ். ஆர்.எண்டர்பிரைசஸ் நிறுவனம் சார்பில் ஆட்கள் தேர்வு செய்யப்பட்டு வருகிறது.

துப்புரவு தூய்மை பணிகளுக்கு ஆட்களை தேர்வு செய்யும் அந்த நிறுவனம் கொத்தடிமைகளை போல பத்திரத்தில் எழுதி வாங்கும் அவலம் அரங்கேறி வருகிறது.

எஸ். ஆர். எண்டர்பிரைசஸ் நிறுவனத்தைச் சேர்ந்த கண்காணிப்பாளராக உள்ள அருண் என்பவர் 100 ரூபாய் பத்திரத்தில் துப்புரவுப் பணி செய்ய வரும் பணியாளர்களிடத்தில் அரசின் எந்த சலுகையும் கேட்கக் கூடாது. நிரந்தர பணியாளர்களுக்கு வழங்கப்படும் இ.எஸ்.ஐ., பி.எப். போன்றவற்றை கேட்கக் கூடாது. பணியாளர்கள் சங்கங்கள் சார்பில் பணி நிரந்தரம் கேட்டு போராட்டம் நடத்தக் கூடாது. போராட்டம் நடத்தினால் நிர்வாகம் எடுக்கும் முடிவிற்கே கட்டுப்பட்டு பணியில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும். எந்த பிரச்சினையும் செய்யக்கூடாது என 100 ரூபாய் பத்திரத்தில் தொழிலாளர்களிடம் கையெழுத்து வாங்கி அடிமைகள் போல் மாற்றி வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

### குஜராத் மாநிலம் அகமதாபாத்தில்

# சபர்மதி எக்ஸ்பிரஸில் தீ விபத்து!

*அகமதாபாத், ஜூலை 16-* குஜராத் மாநிலம் அகமதாபாத்தின் சபர்மதி பகுதியில் உள்ள கலிகாம் ரயில்வே யார்டில், சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயிலின் ஒரு பெட்டியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ விபத்தால் அப்பகுதி முழுவதும் பதற்றம் நிலவியது. மேலும், சம்பவ இடத்தில் மக்கள் கூட்டம் கூடியது. அதிர்ஷ்டவசமாக, ரயில் யார்டில் நிறுத்தப்பட்டிருந்ததாலும், அதில் பயணிகள் யாரும் இல்லாததாலும், பெரிய உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

சம்பவம் குறித்து தகவல் கிடைத்தவுடன், தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து, பெரும் முயற்சிக்குப் பிறகு தீயை முழுமையாகக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். தீ மற்ற பெட்டிகளுக்குப் பரவுவதற்கு முன்பே கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதால், மேலும் சேதம் ஏற்படுவது தடுக்கப்பட்டது.

தீயணைப்புத் துறையினர் தகவலின் படி, தீ விபத்து ஏற்பட்ட அந்தப் பெட்டியானது ரயில்வே துறையால் முன்கூட்டியே பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு, வழக்கமாகப் பயன்படுத்தப்படாமல் இருந்தது. அந்தப் பெட்டி முற்றிலும் காலியாக இருந்ததால், அதில் பயணிகளோ அல்லது ரயில்வே ஊழியர்களோ இல்லை. தீ விபத்திற்கான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

முதற்கட்ட மதிப்பீடுகளின்படி, மின்கசிவு அல்லது வேறு ஏதேனும் தொழில்நுட்பக் காரணம் காரணமாக இருக்கலாம் என கூறப்படுகிறது. இருப்பினும் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை. ரயில்வே அதிகாரிகள் இந்தச் சம்பவம் குறித்து விரிவான விசாரணையைத் தொடங்கியுள்ளனர். விசாரணை முடிந்த பின்னரே தீ விபத்திற்கான சரியான காரணம் தெரியவரும்.